

காஞ்சிபுரத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் ஏற்பட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்.7. ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவருடைய திருவுருவத்தை மலர்களால் அலங்கரிக்கப்பட்டதை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ மரியாதை செலுத்தி அறுசுவை உணவை வழங்கினார். உடன். சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், சன் பிராண்டு ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் கே. திலகர், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர். திருமதி. நித்யா சுகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கோவைக்கு வருகை தரும் கழகத் தலைவர் –

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் நா,கார்த்திக் – தொண்டாமுத்தூர் அ.ரவி – தளபதி முருகேசன் அறிக்கை!

கோவை, ஆக.9-

பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (10.8.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.45 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தர உள்ளார்.

கழகத் தலைவர் அவர்களுக்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அதுசமயம், இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகி கள், மாநகராட்சி மேயர், தலைமைக் கழக நிர்வாகி கள், துணை மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பகுதி கழக, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள்,

அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA-2, BDA பூத் கமிட்டி நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### தமிழ்நாட்டில் e-NAM தளத்தில்

# விவசாயிகளின் பதிவை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஆக.9-

நடைபெற்று வரும் மழை கால கூட்டத்தொடரில், மின்னணு பெயரின் கீழ் தமிழ்நாடு மாநிலத்தில், குறிப்பாக தருமபுரி தொகுதியில், தேசிய வேளாண் சந்தை (eNAM) தளத்தில் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை என்ன? என்று மக்களவையில் தருமபுரி தொகுதி ஆ.மணி கேள்வி எழுப்பினார். அவரது கேள்விகள் வருமாறு:-



தர்மபுரி மாவட்டத்தில் உள்ள eNAM தளத்தில் விவசாயிகளின் பதிவை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் உள்ள கூடுதல் மண்டிகள் மற்றும் மாவட்டங்களுக்கு,குறிப்பாக தருமபுரி போன்ற பகுதிகளில், eNAM தளத்தின் அணுகல் மற்றும் செயல்பாட்டை விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

அப்படியானால், தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் eNAM உடன் ஒருங்கிணைக்க முன்மொழியப்பட்ட புதிய மண்டிகளின் எண்ணிக்கை உள்ளிட்ட விரிவாக்க திட்டங்களின் விவரங்கள் என்ன? என்று மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ராம்நாத் தாகூரிடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பினார்.




